2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொகுதியில் எல்லாக் கல்லூரிகளையும் கொண்டு வந்திருக்கிறோம். இதையும் அமைத்துக் கொடுங்கள் என்று கேட்கிறார். ஆகவே, அவருடைய காலத்திலே செய்ய முடியாததை இப்பொழுது கேட்கிறார். இப்பொழுது நிதி நெருக்கடியான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், 110 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 45 பணியிடங்கள்—ஒரு புதிய கல்லூரி துவக்க வேண்டுமென்றால், அதற்குத் தேவையான 45 ஆசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் பணி நியமனங்கள் செய்யப்படாமல், கிட்டத்தட்ட 700-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, நல்ல தரமான கல்வியைக் கொடுக்க வேண்டுமென்றால், முதலில் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அதனால் அத்தகைய சூழ்நிலையில் புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு ஏதுவாக அரசின் சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

தொழிற்பூங்கா

***78459—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் வட்டம், கரிவலம்வந்தநல்லூர் பகுதியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் வட்டம், கரிவலம்வந்தநல்லூர் பகுதியில் தனியாக சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டம் புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம். அந்த மாவட்டத்தில் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. தென்காசி மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியான சங்கரன்கோவில் வட்டம், திருவேங்கடம் வட்டம் ஆகியவை வறட்சியான பகுதிகள்; வானம் பார்த்த பூமி. அங்கே படித்த இளைஞர்கள் நிறைய பேர் வேலையின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க கரிவலம்வந்தநல்லூர், சிவகிரி, ராஜபாளையம், சங்கரன்கோவில், திருவேங்கடம் ஆகிய வட்டங்களுக்கு நடுவில் அமைந்திருக்கின்ற ஓர் ஊர். வரலாற்றுச் சிறப்புமிக்க பராக்கிரம பாண்டியன் அவர்களால் கட்டப்பட்ட பால்வண்ணநாதர் கோயில் இருக்கின்ற ஊர். அந்த ஊர் பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அங்கு சிவனை யானை வலம் வந்ததால், அது கரிவலம்வந்தநல்லூர் என்ற காரணப் பெயர் பெற்ற ஊர். நிட்சேப நதி மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து இவ்வூரின் வழியாக கிழக்கு நோக்கி பாய்ந்து கொண்டிருக்கின்றது. ராஜபாளையம்–திருநெல்வேலி மாநில நெடுஞ்சாலை செல்கின்றது. சென்னையிலிருந்து கொல்லம் செல்கின்ற இரயில் பாதை அந்த வழியாகச் செல்கின்றது. தேவையான நிலங்கள் நிறைய இருக்கின்றன. விலை குறைவான நிலங்கள் அங்கே இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, அப்பகுதியில் ஒரு தொழிற்பூங்கா அமைத்தால் அங்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

2023 ஏப்ரல் 10]

குறிப்பிடுவதைப்போல, புதிதாக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய தென்காசி மாவட்டத்தில் புதிய தொழிற்பூங்காக்கள் ஏதும் அமைக்கப்படவில்லை. ஆனால், கடந்த 2021 ஆம் ஆண்டிலேயே அங்கே ஒரு தொழிற்பூங்கா அமைக்கப்பட வேண்டுமென்று SIPCOT *மூலமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு, சுமார் 90 ஏக்கர் நிலம் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும் தெரிவு செய்யப்பட்டது. ஆனால், அது மேய்ச்சல் புறம்போக்கு நிலமாக இருக்கக்கூடிய காரணத்தால், அதில் நமக்கு* enter–upon permission *கிடைக்காமல்,* alienation*-க்கும் ஒரு தடையிருந்த காரணத்தால் தொடர்ச்சியாக அதில் நாம் செயல்பட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.*

இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பகுதியை நானும் ஓரளவிற்கு நன்றாக அறிவேன். அதனுடைய நிலப் பகுதியையும், நிலப்பரப்பையும் நான் அறிந்தவன். கரிவலம்வந்தநல்லூரைப் பொறுத்தமட்டில், அது மிகுந்த வரலாற்றுத் தொடர்புடைய ஓர் ஊர். ஆன்மீக மக்களுக்கு அது ஒரு பெரிய ஷேத்திரமாகவும் இருக்கக்கூடிய ஓர் இடம். எனவே, அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். அது மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பயனுள்ளதாக அமைய வேண்டுமென்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு நானும் உடன்படுகிறேன். வரக்கூடிய காலங்களில் சரியான இடம் அந்தப் பகுதியிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகுமென்றால், SIPCOT *மூலமாக தொழிற்பூங்கா அமைப்பதற்கான கருத்துருவை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் எலுமிச்சைப் பூ அதிகமாகப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே வாசனைத் திரவியம் தயாரிக்கின்ற தொழிற்சாலை மற்றும் எலுமிச்சையை மூலப் பொருளாக வைத்து தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தினைச் சார்ந்த தூத்துக்குடியில் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன; நெல்லை மாவட்டத்திலும் நிறைய இருக்கின்றன. அதன் குழந்தையாகத் திகழ்கின்ற தென்காசி மாவட்டத்திலும் நீங்கள் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும். தற்போது*

இயலாது என்று சொல்லியிருக்கின்றீர்கள்; எதிர்காலத்தில் முடியும் என்ற நம்பிக்கையோடு தங்களுக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்பூங்கா அமைகிற நேரத்தில் அங்கே உரிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கும். இப்போது, SIDCO மூலமாக அருகிலிருக்கக்கூடிய ராஜபாளையத்திலும் ஒரு தொழிற்பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பினைச் செய்திருக்கிறார்கள். ராஜபாளையம் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய திருவேங்கடம், கரிவலம்வந்தநல்லூர், சங்கரன்கோவில் போன்ற பகுதிகளும் நிச்சயமாக அதிலே பயன்பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, தொழிற்பூங்கா ஒன்று அங்கே ஏற்படுத்தக்கூடியபட்சத்தில், தொடர்ச்சியாக வரக்கூடிய தொழிற்சாலைகளில் முதலீடு செய்யக்கூடிய முதலீட்டாளர்கள் யாரேனும் நிச்சயமாக முன்வருவார்களென்று சொன்னால், அவர்களுக்கு உரிய ஊக்குவிப்பினை அளித்து, அங்கே தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

கால்நடை மருத்துவமனை

***9737—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், செம்பேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?